


# “கருஞ்சட்டைக் கழகமும், கருப்பு-சிவப்பு கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கி!”

**கழக இளைஞர் அணி நடத்திய ‘தி.மு.க. 75 அறிவுத் திருவிழா’ நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘இருவண்ணக் கொடிக்கு வயது 75’ கருத்தரங்கத்தின் பத்தாவது அமர்வில் ‘கருஞ்சட்டை கழகமும் கருப்பு சிவப்பு கழகமும்’ என்னும் தலைப்பில் திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் ஆற்றிய உரை :**



## கொளத்தூர் மணி
### திராவிடர் விடுதலைக்கழகத் தலைவர்

“இயக்கங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அவை இலட்சியங்களை முன்வைக்கும், இலக்குகளை எடுத்துச் சொல்லும். அதை நோக்கி மக்களை இயங்க வைக்க முயற்சி செய்து பரப்புரை செய்யும், போராடும். ஆனால், கட்சிகள்தான் ஆட்சி அமைத்து அவற்றை நடைமுறைப்படுத்தும். அரசியல் கட்சி என்று வருகிறபோது அதற்கான எல்லைகள் உண்டு. ‘அரசியல் இயக்கம் சாத்தியமானவற்றை செய்யலாம்; பெறக்கூடியவற்றைப் பெறலாம்; மிகச் சிறந்ததுதான் வேண்டும் என்றில்லை. சிறந்ததற்கு அருகில் இருப்பதைக்கூட நடைமுறைப்படுத்தி, அடுத்த வாய்ப்புக்கு நகர்த்தலாம்’ என்பார் சிந்தனையாளர் பிஸ்மார்க்.

**இயக்கமும் கட்சியும்**

இயக்கங்களுக்கு இருக்கிற கொள்கையை அரசியல் கட்சிகளால் நடைமுறைப்படுத்த முடியுமா? அத்தனையும் அரசியல் நடைமுறைப் படுத்துவதற்கு வாய்ப்புகள் குறைவுதான். ஆனாலும் ஏறத்தாழ அருகில்போய் ஆட்சி நடத்திய கட்சியும், அதற்கான கொள்கைகளை முன்னெடுத்து வைத்த இயக்கமும் இணைந்து இப்போது அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டியவர்களாய் உள்ளோம். அதுவும் அடிப்படைக் கொள்கையான சனாதன ஒழிப்பு, வருணாசிரம ஒழிப்பு என்பதை இலட்சியமாகக் கொண்டு செயல்படுகிறபோது, அதற்கான எதிரிகளுக்கு எதிராக நாம் பரந்து விரிந்த கூட்டணியாய் நின்று எதிர்க்கிறோம்.

**பெரியாரும் அண்ணாவும்**

1949-இல் பெரியாரும் அண்ணாவும் பிரிந்திருந் தார்கள். 1967-க்குப் பிறகுதான் இணைந்தார்கள். ஆட்சிக்கு வந்த பின்னால்தான் பெரியார் அண்ணாவை ஆதரித்தாரா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். 1962 ஜனவரி முதல் நாள் பெரியார் விடுத்த ‘பார்ப்பனத் தோழர்களுக்கு’ என்ற அறிக்கையின் இறுதியில், ‘தேர்தலுக்குப் பிறகு, அரசியல் திட்டம் எதுவாக இருந்தாலும் என் சமுதாயத் திட்டம் என்பது பார்ப்பன எதிர்ப்பாகத்தான் இருக்க முடியும்’ என்று எழுதிவிட்டு, ‘இனி கண்ணீர்த் துளி கட்சி தேர்தலுக்குப் பிறகு, இந்த நாட்டில் உலவ வேண்டுமானால் பார்ப்பன எதிர்ப்பைக் கைத்தடியாகப் பிடித்துக்கொள்ள வேண்டியவர்கள் ஆவார்கள். இந்தக் காரியத்துக்கு என்னை அணுகலாம்; நானும் ஆதரவு அளிக்கலாம். எனக்கு சமுதாயத் துறையில் பார்ப்பனர்களைத் தவிர, வேறு யாரும் எதிரிகள் அல்ல’ என்றார். அப்போது தி.மு.க.வை ‘கண்ணீர்த்துளிகள்’ என்றே அழைப்பார் பெரியார்.

திராவிட முன்னேற்றக் கழகம் இரண்டாவது தேர்தலைக்கூட அப்போது சந்தித்திருக்கவில்லை. பெரியார் அறிக்கை வெளியாகி சில மாதங்கள் கழித்துத்தான் தேர்தல் நடந்தது. ஆனால், பெரியார் ‘ஒருவேளை ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டா லும் இந்தப் பார்ப்பன எதிர்ப்புச் சிந்தனைகளைத்தான் அடித்தளமாக வைத்து இயங்க வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் இருக்கும். அதில் நான் இப்போது எதிர்த்துக் கொண்டிருக்கிற அல்லது என்னுடன் இருந்து பிரிந்து சென்றிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் என்னை அணுகினால் நான் ஆதரவு கொடுப்பேன். எனக்கு திராவிட முன்னேற்றக் கழகம் எதிரி அல்ல! பார்ப்பனர்கள்தான் சமுதாயத்துறையில் என்னுடைய எதிரிகள். அதற்காகத் தி.மு.க.வுக்கு ஆதரவு கொடுப்பேன்’ என்று 1962 தேர்தலுக்கு முன்பே தெளிவாகக் கூறினார். 1967-இல் பெரியாரும் அண்ணாவும் இணைந்தார்கள்.



**நடைமுறைப்படுத்தியது தி.மு.க**

பெரியாருடைய லட்சியங்கள் தி.மு.க. ஆட்சியில் எப்படியெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட்டது என்பதற்கு சிலவற்றைச் சொல்ல வேண்டும்.

செங்கல்பட்டில் 1929-இல் நடைபெற்ற முதல் சுயமரியாதை மாநாட்டின் தீர்மானத்தைத்தான் 1989-இல் சட்டமாக்கி பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கினார் கலைஞர். செங்கல்பட்டில் மட்டுமல்ல, பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கக்கோரி ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானங்கள் இயற்றப்பட்டன. ஈரோடு மாநாட்டில் தீர்மானம், விருதுநகர் மாநாட்டில் தீர்மானம் எனத் தொடர்ச்சியாக தீர்மானங்கள் நிறைவேறின.

ஆனால், முதல் மாநாட்டுத் தீர்மானத்துக்கு 60 ஆண்டுகள் கழித்து, தமிழ்நாட்டிலும், அதன்பிறகு, 16 ஆண்டுகள் கழித்துத்தான் இந்திய அளவிலும் பெண்களுக்குச் சொத்துரிமைக்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. தமிழ்நாட்டுக்கு 16 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் இந்திய அளவிலான சட்டத்தை இயற்றி நடைமுறைப்படுத்தினார்கள். நாம் வழிகாட்டி இருக்கிறோம். இப்போது எல்லா மாநிலங்களிலும் இருமொழிக் கொள்கைக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். கடந்த முறை ஆட்சியில் இருந்தபோது சித்தராமையா கர்நாடக சட்டமன்றத்தில் இந்தியை எதிர்த்துப் பேசினார். ‘நாம் 50 ஆண்டுகள் பின்தங்கி இருக்கிறோம் நமக்கு முன்னாலே 1967-லேயே திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையைக் கொண்டு வந்துவிட்டது’ என்று அப்போது சொன்னார். இப்போது மராட்டியமும் ‘இந்தி வேண்டாம்’ என்று சொல்கிறது. இப்படி இந்தித் திணிப்பு எதிர்ப்பாக இருந்தாலும் பெண்களுக்கான சொத்துரிமையாக இருந்தாலும் இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது தி.மு.க.

**பெண்கள் மேம்பாடு**


‘பெண்களை வெறும் வைத்தியத் தொழிலுக்கும், உபாத்தியர் தொழிலுக்கும், (ஆசிரிய தொழிலுக்கும்) மட்டுமே எடுக்கிற நிலையை மாற்றி, காவல் துறையிலும் இராணுவத்திலும் பெண்களைச் சேர்க்க வேண்டும்’ என்று விருதுநகர் சுயமரியாதை மாநாட்டில் தீர்மானம் இயற்றினார் பெரியார். 1973-இல் அதைச் சட்டமாக்கினார் கலைஞர். தமிழ்நாட்டில் பெண் காவலர்கள் உருவாகினர்.

1948-ல் தூத்துக்குடி மாநாட்டில் பெரியார் ‘சென்னை மாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் இந்திய யூனியன் அரசாங்கம் சென்னை மாகாண சாதிவாரி பிரதிநிதித்துவ முறை சட்டத்தை தபால், தந்தி, ரயில்வே, அகில இந்திய ரேடியோ, அகில இந்திய உத்தியோகங்களில் அனுசரிக்க வேண்டும்’ என்று ஒரு தீர்மானத்தை இயற்றினார். ஆனால், அப்போது முடியவில்லை. இப்போது அகில இந்திய அளவில் மருத்துவப் படிப்புகளில் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்த இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை வழக்கு போட்டு நடைமுறைப்படுத்தச் செய்தது திராவிட முன்னேற்றக் கழகம். அதனால் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பயன்பெற்றனர்.

## அனைவரும் போற்றும் அறிவுத் திருவிழா!

**அறிவுத் திருவிழாவின் ஒரு பகுதியாக நடைபெற்ற ‘முற்போக்கு புத்தகக்காட்சி’யில் ஒவ்வொரு பதிப்பகத்திலும் அதிகம் விற்பனையான நூல்கள் :**










பாரதி புத்தகாலயம் :
**சே குவேரா ஒரு போராளியின் வாழ்க்கை**

ஹெர் ஸ்டோரீஸ் :
**துப்பட்டா போடுங்க தோழி**

காட்டாறு வெளியீடு :
**அடிமைப்படுத்தும் குலதெய்வங்கள்**

கலப்பை பதிப்பகம் :
**சித்தார்த்தன் (மக்கள் பதிப்பு)**

**அடித்தட்டு மக்கள் மீது அக்கறை**

சென்னை வானொலிக்கு அளித்த பேட்டியில், ‘அரசு உத்தியோகங்களில் பெண்களுக்கு 50 விழுக்காடும், ஆண்களுக்கு 50 விழுக்காடும் ஒதுக்குவது பெண்களுக்கு சம உரிமை அளிக்கும். பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்க உதவும்’ என்று பெரியார் சொன்னார். இப்போது தி.மு.க. அரசு ஒவ்வொரு துறையிலும் அதைச் செய்துகொண்டு வருகிறது. குரூப்-1 பிரிவில் ஆண்களைவிட பெண்கள் கூடுதலான (63 விழுக்காடு) அளவுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கும் செய்தி.

ஒவ்வொரு நிலையிலும்கூட அடித்தட்டு மக்களைச் சிந்திப்பவர்களாக நம் தலைவர்கள் இருந்தனர். ‘தார்ச்சாலையில் தார் ஊற்றும் பணியைச் செய்யும் தொழிலாளிக்கு காலுக்கு ஷூ வாங்கித் தர வேண்டும்’ என்று கலைஞர் காலத்தில்தான் சட்டம் இயற்றப்பட்டது. எந்த முதலமைச்சராவது தரையைப் பார்த்திருப்பார்களா? வானத்தைப் பார்த்துக்கொண்டுதான் போவார்கள். பதவிக்குப் போன பின்பும், இவர் அடித்தட்டு மக்களின் காலை அல்லவா பார்த்துக்கொண்டு பயணம் செய்திருக்கிறார். அதனால்தான் அப்படியோர் ஆணையைப் பிறப்பித்தார்.

இப்படி, அடித்தட்டு மக்களுக்காகச் சிந்திப்பதில், செயல்படுவதில் கருஞ்சட்டை கழகமும் கருப்பு சிவப்பு கழகமும் இரட்டைக்குழல் துப்பாக்கியாக இணைந்து செயல்படுகின்றன.”